Makkal Kural

மக்கள் குரல்

18-4-2014

# சாய்ராம் என்ஜினியரிங் கல்லூரியில் 2 நாள் நிர்வாக இயல் தேசிய கருத்தரங்கு




சாய்ராம் என்ஜினியரிங் கல்லூரியின் சார்பில் நடைபெற்ற தேசிய அளவிலான இரண்டு நாள் கருத்தரங்கில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் ராஜாமுத்தையா மருத்துவக் கல்லூரியின் புள்ளியியல் துறையின் பேராசிரியர் ஜான் வில்லியம் பெலிக்ஸ் மற்றும் துறையின் இயக்குனர் கே.மாறன் ஆகியோர் பங்கேற்றனர்.

சென்னை, ஏப் 17–

சென்னை சாய்ராம் என்ஜினியரிங் கல்லூரியில் நிர்வாகவியல் துறையின் சார்பில் தேசிய அளவிலான கருத்தரங்கை சேர்மன் லியோமுத்து, தலைமை எக்சிகியூடிவ் அதிகாரி சாய் பிரகாஷ் லியோமுத்து ஆகியோர் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

இக்கருத்தரங்கில் பல்வேறு கல்லூரிகளிலிருந்தும், மாணவ, மாணவிகள் பல்கலைக்கழகங்களின் துறை சார்ந்த மாணவர்கள் பங்கேற்றனர்.

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தை சார்ந்த ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியின் புள்ளி இயல் துறையின் பேராசிரியர் ஜான் வில்லியம்ஸ் பெலிக்ஸ் தலைமையில் இக்கருத்தரங்கம் நடைபெற்றது.

சாய்ராம் கல்லூரியின் நிர்வாகவியல் துறையின் இயக்குனர் கே.மாறன் தேசிய அளவிலான இக்கருத்தரங்கை தொடங்கி வைத்தார்.

சாய்ராம் கல்லூரி கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர் கே.சவுந்திர பாண்டியன் கருத்தரங்கில் பங்கேற்றவர்களை கவுரவித்தார். இக்கருத்தரங்கின் மூலம் பல்வேறு கருத்துகள் பரிமாறப்பட்டது. இதில் ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆய்வாளர்களும் கருத்தரங்கில் தங்களது கருத்துக்களை துறைசார்ந்த மாணவர்களுக்கு பயன்படும் வகையில் வெளிப்படுத்தினர். தேசிய அளவிலான இக்கருத்தரங்கில் பங்கேற்ற பல்வேறு கல்லூரிகளில் மாணவ, மாணவிகள் சாய்ராம் கல்லூரியில் மிகவும் சிறந்த இக்கல்லூரியின் ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளதால் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று தெரிவித்தனர்.

இக்கருத்தரங்களில் மாணவ, மாணவிகளிடையே கேள்வி, பதில் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இது பயனுள்ளதாகவும் உள்ளது என்று கருத்து தெரிவித்தனர். இதில் சிறந்த மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழும் பரிசுகளும் வழங்கப்பட்டது.

இக்கல்லூரியின் நிர்வாக இயல் துறையின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் சாய்ராம் என்ஜினியரிங் கல்லூரியின் தலைவர் லியோ முத்து மற்றும் தாளாளர் சாய்பிரகாஷ் ஆகியோர் பங்கேற்றனர்.